FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | அரசியல் விஞ்ஞானம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

- ❖ *1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, தரப்பட்ட அறிவுறுத்தல் களுக்கமைய விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் புள்ளடி (✕) இடுக.*
- ➢ *1 - 15 வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் தலைப்புக்குப் பொருத்தமான சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.*

01) அரசியல் விஞ்ஞானம் என்பது

A - கோட்பாடு அரசியல், பியோக அரசியல் எனும் இரு பகுதிகளை கொண்டமைந்தது.

B - சமூக விஞ்ஞானங்களின் குடும்பத்தைச் சார்ந்த பாடமாகும்.

C - மிகப் பழமையான பாடமாக இருப்பதோடு கி. மு. 4 ஆம் நூற்றாண்டிலேயே முறையான கற்கைக்குட்பட்டது.

D - மனிதர்களின் அரசியல் நடத்தையையும் செயற்பாடுகளையும் கற்பதில் கவனம் செலுத்துகிறது.

E - இயற்கை விஞ்ஞானங்களுடன் மிக நெருங்கிய வகையில் தொடர்புபடுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

02) அரசியல் என்பது

A - அரசியல் விஞ்ஞானத்தின் நடைமுறைப் பகுதியாகும்.

B - அதிகாரப் போராட்டத்தின் நடைமுறை வெளிப்பாடாகும்.

C - தனிப்பட்டவர்கள், அரசியல்வாதிகள், அரசியல்கட்சிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் ஒரு விளையாட்டாகும்.

D - யார், எதனை எப்போது எவ்வாறு பெற்றுக் கொள்வார் என்பதனை தீர்மானிக்கும் விளையாட்டாகும்.

E - முதலில் மாக்கியாவலியினால் பயன்படுத்தப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

03) நடத்தை வாதம் என்பது

A - அரசியல் செயற்பாட்டாளர்களின் அவதானிக்கக்கூடிய நடத்தையை மட்டும் பகுத்தாய் வதனை வலியுறுத்துகிறது.

B - அரசியல் விஞ்ஞானக் கற்கையில் 1940 களில் தோன்றிய ஒன்றாகும்.

C - கோட்பாட்டு நிர்மானத்தையும், ஆய்வு முறையியலையும் அபிவிருத்தி செய்வதில் பங்காற்றியுள்ளது.

D - நுட்பமுறைகளைக் காட்டிலும் விளைவுகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது.

E - அரசியலாய்வின் மையப் பொருளாக அரசியல் மனிதனைக் கொண்டுள்ளது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

04) சமூகவியல் அணுகுமுறையானது

A - அரசறிவியலை சமூகத்தளத்தில் வைத்து ஆராய்கின்றது.

B - சமூகநிறுவனங்களையும், தனிமனிதனையும் ஆராய்வதன் மூலம் அரசறிவியலை விளங்கிக் கொள்கின்றது.

C - அரசியல் கலாசாரம், அரசியல் சமூகமயமாதல், அரசியல் அபிவிருத்தி போன்றவற்றை புறந்தள்ளி விடுகிறது.

D - அரசியல் சமூகவியல் கற்கைக்கு அத்திவாரமிடப்பட்டுள்ளது.

E - சமூகவியல், மானிடவியல் என்பன இதன் அடிப்படைகளாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

05) அரசாங்கம் என்பது

A - சமூகத்தின் பொது விருப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் முகவராகும்.

B - சட்ட, நிறைவேற்று, நீதி ஆகிய முத்துறைகளையும் அடக்கியதாகும்.

C - ஸ்பரிக்கக்கூடியதும், புலனீடானதுமாகும்.

D - தனது விருப்பினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு பிரயோகிக்கும் கருவியாகும்.

E - நிரந்தரமற்றதும், காலரீதியான மாற்றத்துக்குட்படுவதுமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

06) அரசு என்பது

A - வரையறுக்கப்பட்ட நிலம், மக்கள், அரசாங்கம், இறைமை போன்ற கூறுகளை கொண்டது.

B - மனிதர்களால் தாபிக்கப்பட்ட பல்வேறு சங்கங்களுள் ஒன்று மட்டுமாகும்.

C - சமூகத்தின் மூலம் இயங்குகின்றது.

D - நிரந்தரமான ஒன்றாகும்.

E - முழுமையான ஒன்றாகும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

07) சமூகமானது

A - பொதுவானதும் தனித்துவமானதுமான கலாசாரத்தைக் கொண்ட அமைப்பு.

B - நவீன அரசியல் சமூகத்திற்கு, அரசின் தேவை அவசியமற்றது.

C - அது செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒன்றன்று.

D - உலகளாவிய வியாபகத் தன்மை கொண்டது.

E - பரந்துபட்ட நோக்கங்களைக் கொண்டது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

08) தேசமானது

A - மொழி, மதம், இனம், ஒருமைப்பாடு, கலாசாரம் அரசியல்உணர்வு கொண்ட மக்கள் குழுவாகும்.

B - தேசியக்கொடி, தேசியகீதம் இறந்தகால வரலாற்றைக் கொண்ட மக்கள் குழுவாகும்.

C - ஓர் இனக்குழுவை மட்டும் கொண்டதாக இருக்கும்.

D - பொதுவான சிந்தனையையும் சுய உணர்வினையும் கொண்டதாக காணப்படும்.

E - பிறப்பினாலும், மரபினாலும், பொது மொழியினாலும் ஒன்றுபட்ட மக்கள் குழுவாகும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

09) அரசியல் அமைப்பு என்பது

A - ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாகும்.

B - எழுதப்பட்ட சட்ட ஆவணமாக மட்டுமே இருக்கும்.

C - ஒரு நாட்டின் அதியுயர் சட்டத் தொகுப்பாகும்.

D - இறைமையின் உறைவிடத்தைக் காட்டும் ஒன்று.

E - அரசாங்கத்தின் சட்டங்களுக்கெல்லாம் தாய்ச் சட்டமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

10) குறைந்தபட்ச அரசின் பிரதான பண்புகளாவன

A - தனியார் சொத்துரிமையினால் ஏற்படும் சமூக அநீதியை ஒழிப்பதற்குச் செயற்படுதல்.

B - தனிப்பட்ட பிரசைகள் தாம் சிறந்ததெனக் கருதும் சுய வாழ்வை கொண்டு நடத்தக் கூடியதான அமைதி மற்றும் சமூக ஒழுங்குச் சூழலை கொண்டு நடத்துதல்.

C - அரசின் வகிபங்கினை இரவுக் காவலாளி நிலைக்குக் குறுகியதாக்குதல்.

D - பொருளாதார மற்றும் சமூக விடயங்களை முழுமையாகத் தனிப்பட்டவர்களின் / தனியார் தொழில்களிடம் விட்டுவிடுதல்.

E - மக்களை உள்ளக ஒழுங்கீனம் மற்றும் வெளியகத் தாக்குதலிலிருந்து பாதுகாத்தல்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

11) நவீன அரசுகள்

A - 20ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நிலையிலிருந்து விடுதலை பெற்ற அரசுகளாகும்.

B - பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பைக் கொண்டவை.

C - மூன்றாம் மண்டல நாடுகளாக அழைக்கப்படுபவை.

D - முதலாம் உலகப் போரின் பின்னர் சுதந்திரமடைந்த தேசிய அரசுகளாகும்.

E - பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைவன.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

12) நலன்புரி அரசு

A - ஜோன் ஸ்டுவட்மில்லின் கருத்துக்களால் வலுப்படுத்தப்பட்டது.

B - சமூக உயர்குழாத்தின் கருவியாகும்.

C - 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சகல துறைகளிலுமான அரசின் தலையீட்டை அவசியமாக்கியது.

D - பொது நலனை நோக்காகக் கொண்டது.

E - அதிகமானோருக்கு அதிகமானதைப் பெற்றுக் கொடுக்கும் ஒன்றாக அரசைக் கண்டது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

13) தலையிடா அரசு

A - அரசியல் ரீதியில் தனிமனித சுதந்திரத்தை வேண்டியது.

B - அரசின் தலையீடற்ற சந்தை முறையை வேண்டியது.

C - திறந்த சந்தைப் பொருளாதாரத்தை அவசியப்படுத்தியது.

D - அடம்சிமித்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளியல் முகத்தை உடையது.

E - பொருண்மிய வளங்கள் அரசுடைமையாவதில் கவனம் செலுத்தியது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

14) இறைமை என்பது

A - ஒரு அரசு தனது மக்கள் மீதும், அம்மக்களின் நிறுவனங்கள் மீதும், செலுத்துகின்ற அபரிதமானதும் நிறைவானதும் எல்லையற்றதுமான அதிகாரம்.

B - உள்வாரியானதும் வெளிவாரியானதுமான பகுதிகளை உடையது.

C - அரசுகள் மட்டும் அனுபவிக்கும் உயர்ந்ததும், தனி முதன்மையானதுமான அதிகாரம்.

D - பலவந்த அதிகார தனியுரிமையை அரசுக்கு வழங்குகின்றது.

E - சட்டத்துறையாலும் நிதித்துறையாலும் அரசினால் பிரயோகிக்கப்படுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

15) சிவில் சமூகம் என்பது

A - அரசின் ஆணையதிகாரத்திலிருந்து மக்களின் சிவில் அதிகாரத்தை வேறுபடுத்திக் காட்டப் பயன்படுத்தும் ஓர் எண்ணக்கருவாகும்.

B - சமூகத்தினால் சுயாதீனகுழுக்களையும் தனியார்சங்கங்களையும் கொண்டு ஒழுங்கமைத் துள்ளது.

C - அனைத்தாண்மை ஆட்சிமுறைகளில் கூட பூரண செயற்பாட்டுச் சுதந்திரத்தை அனுப விக்கிறது.

D - சமூகத்தின் 'சிறிய படையணிகளின் திரட்சி' என அழைக்கப்படுகின்றது.

E - தாராள ஜனநாயகத்தின் ஓர் அத்தியாவசியப் பண்பாக கருதப்படுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

➢ **16 முதல் 22 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.**

16) கிரேக்க அரசு முறையில்

(1) நகராட்சி அதிகாரம், அரசியல் அதிகாரம் படைத்த பிரபுக்களிடையே இருந்தது.
(2) இங்கு அரச நிர்வாகத்தின் பணிகளாக சட்ட ஆக்கம், நிர்வாகம், நீதிமன்று நடவடிக்கைகள் காணப்பட்டது.
(3) மூன்று சமூக அமைப்புக்களைக் கொண்டு இருந்தது.
(4) நிலப்பரப்பு பெரியதாகவும் அப்பெரிய நிலமே ஓர் நகராட்சியாகவும் இருந்தது.
(5) 7 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் கிரேக்கத்தில் இருந்த ஆட்சிமுறை நகராட்சி எனப்பட்டது.

17) அரசியல் கட்சி என்பது

(1) பொதுசன அபிப்பிராயங்களை ஒன்று திரட்ட உதவும்
(2) பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு அவசியமானவையாக மாறியுள்ளன.
(3) சமூகத்தில் சமூக மற்றும் சமயக் கருத்து முரண்பாடுகளை உருவாக்கும் மூலாதாரங்களாகும்.
(4) முறையான அரசியல், பொருளாதார, சமூகக் கருத்தியலைக் கொண்டு ஒழுங்கமைந்த அமைப்புக்களாகும்.
(5) தேர்தல் வெற்றியின் மூலம் அரசியலதிகாரத்தை அமுலாக்குவதனை இலக்காகக் கொண்ட மக்கள் அமைப்புகளாகும்.

18) தேசியவாதமானது

(1) தேசப்பற்றினை வளர்க்கின்றது.
(2) மக்களிடமுள்ள ஏற்றத்தாழ்வை இல்லாதொழித்து சமூக ஒற்றுமையை வளர்க்கிறது.
(3) அரசியல் ஒற்றுமைக்கும், அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் வலுச் சேர்க்கின்றது.
(4) நாட்டின் இறையாண்மை பேணப்படவும், அமைதி நிலவவும், சமாதானம் ஏற்படவும், துணை புரிகின்றது.
(5) மக்களிடம் காணப்படும் மோதல், முரண்பாடு வன்முறைகளை அதிகரிக்கின்றது.

19) அரசியல் பிரதிநிதித்துவம் என்பது

(1) ஒரு தனியாள் அல்லது ஒரு குழு பரந்த மக்கள் கூட்டத்துக்குச் சார்பாக நிற்கும் அல்லது செயலாற்றும் விதத்தை வெளிப்படுத்தும் ஒரு தொடர்பாகும்.
(2) ஒரு வாக்கு - சமமற்ற பெறுமதிகள் என்பதன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப் படுகின்றது.
(3) தற்காலச் சூழல்களில் தாராள ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் ஒரே ஊடகம் எனப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
(4) பிரதிநிதித்துவ அரசாங்கத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.
(5) ஜனநாயக ஆட்சியில் அரசாங்கத்தையும் மக்களையும் இணைக்கும் ஓர் ஊடகமாகும்.

20) மனித உரிமைகள் என்பவை

(1) சட்டத்தினால் கோரப்படக்கூடிய உரிமைகள் மட்டுமாகும்.

(2) அனைத்துலக ரீதியானவை, அடிப்படையானவை என ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(3) சுதந்திரத்துக்கும், சமத்துவத்துக்கும், நீதிக்குமான அடித்தளம் எனக் கருதப்படுகிறது.

(4) மனிதப் பிறவிகளாக இருப்பதனால் மக்களுக்கு உரித்தாகும் உரிமைகளாகும்.

(5) மனிதனுக்குச் சிறந்த அரசியல், சிவில்வாழ்வினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப் படுபவை எனக் கருதப்படுகின்றது.

21) ஐக்கிய அமெரிக்க அரசியல் முறைமையானது

(1) 50 மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சி நாடாகும்.

(2) 1787 இல் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பினை அடிப்படையாக கொண்டதாகும்.

(3) இரு கட்சி முறையைப் பின்பற்றுகின்ற நாடாகும்.

(4) மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படும் சனாதிபதியால் தலைமை தாங்கப்படுகிறது.

(5) சட்டசபை இரு சபைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

22) பிரித்தானிய பாராளுமன்றமானது

(1) சட்டவாக்கத்தில் இறைமை மிக்கதாக இருப்பதனால் எச் சட்டத்தையும் ஆக்குவதற்கும், இரத்துச் செய்வதற்கும் அதிகாரமுடையது.

(2) இரு மன்றுகளைக் கொண்டிருப்பதோடு பொதுமக்கள் சபையே பலம் மிக்க தாபனமாகும்.

(3) நாம நிர்வாகியினால் அவரது தற்துணிவின் அடிப்படையில் கலைக்கப்படும்.

(4) அரசியல் நிறைவேற்றுப் பகுதியைத் தெரிவு செய்யும் மூலமாகும்.

(5) அரசியல் நிறைவேற்றுப் பகுதியை நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவிநீக்க முடியும்.

- **23 முதல் 30 வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் நான்கு கூற்றுக்கள் பிழையானதாகும். பிழையான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

23) பொது கொள்கை என்பது

A - மக்களின் பொதுநலனை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.

B - தனியாட்களின் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.

C - இலாபத்தை உயர்த்துவதற்கு ஒரு தனியார்கம்பனியால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.

D - தனது தனிப்பட்டநலன்களை மேம்படுத்துவதற்கு ஓர் அமுக்கக் குழுவினால் வகுக்கப்படும் ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும்.

E - ஒரு வர்த்தக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுத் திட்டமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

24) சமூக மோதல் குறிப்பது

A - நிறுவனத்துக்குள்ளான மோதலை ஆகும்.

B - சமூகக் குழுக்களுக்கிடையிலான மோதலை ஆகும்.

C - தனிநபர்களுக்குள்ளான மோதலை ஆகும்.

D - அரசியல் கட்சிகளுக்குள்ளான மோதலை ஆகும்.

E - அரசாங்கத்துக்குள்ளான மோதலை ஆகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

25) இராஜகாரியமுறை ஒழிக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தம்

A - கோல்புரூக் - கமரன்

B - மனிங்

C - மனிங் - டெவின்ஷியர்

D - டொனமூர்

E - சோல்பரி

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

26) இலங்கையில் சட்டமன்றுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு முதன்முதலாக வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது.

A - *1833* கோல்புரூக் - கமரன் சீர்திருத்தம்

B - *1911* குரூ - மக்கலம் சீர்திருத்தம்

C - *1924* மனிங் - டெவின்ஷியர் சீர்திருத்தம்

D - *1931* டொனமூர் யாப்பு சீர்திருத்தம்

E - *1948* சோல்பரி யாப்பு சீர்திருத்தம்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

27) டொனமூர் அரசாங்க முறையில் "காவல் நாய்கள்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டமை

A - தேசாதிபதியையும் மூன்று அரசாங்க காரியதரிசிகளையும் குறிப்பிடுவதாகும்.

B - மூன்று அரச காரியதரிசிகளையும் குறிப்பிடுவதாகும்.

C - தேசாதிபதி, குடியேற்ற நாட்டு காரியதரிசி, பிரதம காரியதரிசியை குறிப்பிடுவதாகும்.

D - அமைச்சரவை உறுப்பினரை குறிப்பிடுவதாகும்.

E - உத்யோகபற்றுள்ள உறுப்பினரைக் குறிப்பிடுவதாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

28) டொனமூரின் நிருவாக குழுமுறையானது

A - ஏழு குழுக்களாகச் செயற்பட்டது.

B - பிரதமரால் தலைமை தாங்கப்பட்டது.

C - தேர்தல் மூலம் மக்களால் நேரடியாக உருவாக்கப்பட்டது.

D - வினைத்திறனுடன் செயற்பட்டது.

E - கூட்டுப்பொறுப்பு காணப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

29) இலங்கைத் தேசிய இயக்கம்

A - பிரித்தானியக் காலணித்துவ ஆட்சியிலிருந்து பூரண சுதந்திரம் பெறுவதற்குப் பலமான முறையில் கூக்குரலிட்டது.

B - தேசிய ஒருமைப்பாட்டின் மேம்பாட்டில் அதிக அக்கறை செலுத்தியது.

C - மேற்கத்தைய மயமாகிய சமூக உயர் குழாம் வகுப்பினரால் ஆரம்பிக்கப்பட்டுத் தலைமை தாங்கப்பட்ட ஓர் அமைதியான இயக்கமாக இருந்தது.

D - சமூகத்திலிருந்த சகல சமூக இனக்குழுக்களின் பங்கேற்பினைப் பெற்ற ஒரு மக்கள் இயக்கமாக இருந்தது.

E - அதிகமாக இந்திய தேசிய இயக்கத்தினை ஒத்திருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

30) சோல்பரி அரசியலமைப்பில் மகாதேசாதிபதி

A - அரசாங்கத்தின் தலைவராவார்.

B - பிரதமரால் தெரிவு செய்யப்பட்டவர்.

C - பிரித்தானிய முடியை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

D - குற்ற விசாரணை ஒன்றின் மூலம் பதவி நீக்கப்படுவார்.

E - பதவிக் காலம் ஆறு வருடங்கள்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

- **31 முதல் 40 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

31) கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்திற்கான காரணம்

A - இலங்கையில் கிடைத்த இலாபத்தை விட இலங்கைக்கான நிர்வாக மற்றும் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்தமை.

B - இலங்கையின் நிர்வாக முறையிலும் நீதி முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம்.

C - ஆள்பதியின் ஆட்சியில் அநீதிகளும் பாரபட்சங்களும் நிலவியமை.

D - நாட்டின் வர்த்தகத்தில் மந்த நிலை ஏற்பட்டமை.

E - பௌத்த மதம் பலவீனமடைந்தமை.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

32) கோல்புறூக் - கமரன் அரசியல் சீர்திருத்தத்தில்

A - ஆங்கிலக்கல்வி துரிதப்படுத்தப்பட்டது.

B - பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

C - மரபுசார் விவசாயம் துரிதப்படுத்தப்பட்டது.

D - இனவாரி பிரதிநிதித்துவமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

E - சட்டசபை அறிமுகம் செய்யப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

33) குரு மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தில்

A - வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை வழங்கியது.

B - கற்றோர் குழாம் இலங்கை அரசியலில் பங்கு கொள்வதற்குச் சந்தர்ப்பத்தை வழங்கியது.

C - உத்தியோக பற்றற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

D - மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களை மட்டும் கொண்டிருந்தது.

E - 21 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபை காணப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

34) மனிங் அரசியல் சீர்திருத்தத்தில் சட்டசபையானது

A - தேசாதிபதியைத் தலைமையாகக் கொண்டு செயற்பட்டது.

B - 37 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

C - உத்தியோக சார்பற்ற மூன்று பேர் இனவாரியாக தெரிவு செய்யப்பட்டனர்.

D - இரு அங்கத்துவத்தை சங்கங்களுக்கு வழங்கியிருந்தது.

E - உத்தியோக சார்புள்ள உறுப்பினர்களைக் கூடுதலாகக் கொண்டுள்ளது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

35) மனிங் அரசியல் சீர்திருத்தமானது

A - சிறுபான்மையினத் தமிழர்களின் இனவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கையை நிறைவேற்றத் தவறியது.

B - கண்டிச் சிங்களவர்களின் சுயாட்சிக் கோரிக்கையை நிறைவேற்றத் தவறியது.

C - இலங்கை தேசிய காங்கிரஸின் கோரிக்கைகளை பூரணமாக நிறைவேற்றலில் பின்வாங்கியது.

D - எல்லோருக்கும் வாக்குரிமை அளித்திருந்தது.

E - இனப் பிளவுக்குத் தூபமிடும் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகம் செய்திருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

36) 1924 யாப்பு சீர்திருத்தங்களின் பிராதன பண்புகளாவன

A - இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை வரையறை செய்தமை.

B - சட்ட மன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 49 வரை அதிகரித்தமை.

C - முதன்முதலாக சட்டமன்றில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைப் பெரும்பான்மை யினராக ஆக்கியமை.

D - நிதிக்குழுவின் அதிகாரங்களையும், பணிகளையும் பலப்படுத்தியமை.

E - பொறுப்பும் அதிகாரமும் வேறுபடுத்தப்பட்ட ஓர் அரசாங்கத்தினை தாபித்தமை.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

37) மனிங் டிவன்சயர் அரசியல் சீர்திருத்தத்தில் தேசாதிபதியானவர்

A - சட்டசபையின் தலைவர்

B - சட்டசபையை கலைக்கும், ஒத்திவைக்கும் அதிகாரமிக்கவர்

C - சட்டசபையின் அனுமதியின்றி தற்றுணிவின் பேரில் சட்டமியற்றும் ஆற்றலுள்ளவர்.

D - நாட்டு நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு மசோதாவையும் இரத்துச் செய்யும் அதிகாரமிக்கவர்.

E - சிறுபான்மையினரின் நலன்களை, உரிமைகளைப் பாதிக்கும் மசோதாக்களை இரத்துச் செய்யக்கூடியவர்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

38) டொனமூர் அரசாங்கத்தின் கீழிருந்த தேசாதிபதி

A - பிரித்தானிய முடியினதும் அரசாங்கத்தினதும் பிரதிநிதியாக இருந்தார்.

B - மந்திரிமார் சபையின் தலைவராக இருந்தார்.

C - அரசாங்கத்தின் பிரதான நிறைவேற்றாளராக இருந்தார்.

D - காலனித்துவ நாட்டின் ஏகாதிபத்தியத்தின் நலன்களின் பிரதம பாதுகாவலராக இருந்தார்.

E - சகல மசோதாக்களுக்கும் இறுதி அனுமதிவழங்கும் தனி அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

39) டொனமூர் அரசியல் யாப்பில் நிர்வாகக் குழுமுறையின் தோற்றத்திற்கான பின்னணிகளாவன

A - சுதேச பல்வகை இனங்களையும் நிர்வாகத்தில் பங்குபெற வைத்தல்.

B - சிறுபான்மையினருக்கு நிர்வாகத்தில் கூடுதல் இடமளித்தல்.

C - இலங்கை அரசியல் தலைவர்களுக்கு அரசியல் நிர்வாகப் பயிற்சியளித்தல்.

D - அரசியல் கட்சி வளர்ச்சியடையாத சூழலுக்கேற்ற நிர்வாக முறை.

E - சட்டமியற்றுபவர்களைச் சட்ட நிர்வாகத்தில் இணைத்தல்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

40) 1948 சோல்பரி அரசியலமைப்பின் கீழிருந்த அரசியல் நிர்வாகம்.

A - மந்திரி சபை என்று அழைக்கப்பட்டது.

B - மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களிலிருந்து மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டது.

C - பிரதமர் என்றழைக்கப்படும் ஓர் அமைச்சரினால் தலைமை தாங்கப்பட்டது.

D - பாராளுமன்றுக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூற வேண்டியிருந்தது.

E - ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் சட்டத்துறையால் நீக்கப்பட முடிந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

➢ **41 தொடக்கம் 45 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களை கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் பிழையானவையாகும். பிழையான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

41) பொதுத்துறை நிர்வாகம் என்பது

A - அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் இயந்திரம்

B - தனியார் துறையின் ஒரு பகுதி

C - அரசு ஒன்றில் வாழும் பிரசைகளைக் குறித்து நிற்கின்றது.

D - எல்லா விவகாரங்களையும் முகாமை செய்வது எனக் கொள்ளப்படுகிறது.

E - பொது நலனுக்கான சட்டங்களைத் தனியார்துறை நிறைவேற்ற மேற்கொள்ளும் செயல்களாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

42) மோதல் என்பது

A - முரண்பாடற்ற நிலையை ஒத்தது

B - வெவ்வேறு இலக்குகளை அடைய முயலும் குழுக்களுக்கிடையிலான தொடர்பு நிலையாகும்.

C - அருமையான வளங்களை அடைய நினைக்கும் ஒரு குழுவின் போராட்டமாகும்.

D - அரசுகள் பாரதூரமான இணக்கப்பாட்டிற்கு உள்ளாகியுள்ள நிலைமைகள்

E - போட்டா போட்டியான அபிலாசைகளால் குழுக்களுக்கிடையே உருவாகும் எதிர்ப்பு

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

43) சர்வதேச அரசியல் என்பது

A - உயர்குழாம் அரசியல் எனப்படுகிறது.

B - சர்வதேச நாடுகளின் ஆளும் கட்சிகளின் சித்தாந்த வலையமைப்புக்களாகும்.

C - அரசுகளின் அதிகாரமற்ற, அனுமதியற்ற உத்தியோகத்தர்களின் அரசாங்க மட்டத் தொடர்புகளாகும்.

D - அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் தாபனங்களுக்குமிடையிலான அரசியலாகும்.

E - அரசுகளுக்கிடையில் அதிகாரத்தை பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற போராட்டமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

44) பிரித்தானிய முடியானவர்

A - உண்மை நிர்வாகம் என்பதை நிலை நிறுத்துகிறார்.

B - அரசின் அச்சாணி

C - மக்கள் விருப்பின் பெயரில் தங்கியுள்ளார்.

D - பாராளுமன்றம் முடிவுக்கு கீழ்படிந்தே சட்டமியற்ற முடியும்.

E - பொதுமக்கள் சபையைக் கலைக்கும் தற்றுணிவுண்டு.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

45) அமெரிக்க நிர்வாகத் துறையானது

A - சட்டத்துறையின் பிடியிலிருந்து நீங்கிய ஒன்று

B - கட்சி அரசாங்கத்தால் பின்னப்பட்டுள்ளது.

C - தனிமனித நிர்வாக முறையின் குறிகாட்டி

D - வினைத்திறன் கொண்ட ஆட்சி முறையன்று

E - காங்கிரஸினால் கலைக்கப்படக் கூடியது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

➢ **கீழே தரப்பட்ட கூற்றுக்கள் இலங்கையில் தேசியத்துவ போராட்டத்திற்கு பங்களிப்பு செய்த அமைப்புக்கள் பற்றியதாகும். அக்கூற்றுக்களின் அடிப்படையில் 46 - 50 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - மேற்கத்தைய கலாச்சாரத்திற்கு மக்கள் பழக்கப்பட்டமை

B - இலங்கையில் முதன் முதல் ஒழுங்கமைந்த இயக்கமாக செயற்பட்டது.

C - புரட்சிகரத் தன்மையற்றிருந்தது

D - காலனித்துவத்தின் கீழ் பொறுப்பாட்சி பெறுதல்

E - நாட்டின் தேசிய கலாசாரத்தை கட்டியெழுப்பல்

F - அரசியல் சீர்திருத்தம் பெறுதல்

G - மகாஜன இயக்கமாக இருக்கத் தவறியது

H - குடியேற்ற நாட்டுக் கொள்கைக்கு எதிர்ப்புக் காட்டுதல்

I - மாக்ஸிய, லெனினிசக் சிந்தனையாளர்களைக் கொண்டிருந்தது.

J - பிரித்தானியரால் இயற்றப்பட்ட மதுவரிச் சட்டம்

K - சுதேச சமயங்களைப் பாதுகாத்தல்

L - நாடு முழுவதும் மதுச்சாலைகள் திறக்கப்பட்டமை

M - பழமை போற்றும் தன்மை கொண்டிருந்தது.

N - சூரியமல் இயக்கச் செயற்பாட்டால் ஊட்டம் பெற்றது.

O - சட்டவாக்க சபையை விஸ்தரித்தல்

P - சுதேச கலாசாரங்களை பாதுகாத்தல்

Q - நிர்வாக கழகத்தில் அங்கம் பெறுதல்

R - உயர்குழாம் வகுப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தியது.

S - பொப்பிமல் இயக்கத்திற்கு எதிரான செயற்பாடுடையதாயிருந்தது.

T - மதுவாரியால் பிரித்தானியர் அதிக இலாபமீட்டியமை

46) சமய, கலாசார, மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பொருத்தமான சேர்மானம்

(1) AJEH (2) KPFG (3) EHKP (4) DFOQ (5) BINS

47) கலால் இயக்கத்திற்குப் பொருத்தமான சேர்மானம்

(1) BDEH (2) AJMR (3) LTFG (4) ACDE (5) AJLT

48) அரசியல் போராட்ட இயக்கத்திற்குப் பொருத்தமான சேர்மானம்

(1) DFOQ (2) OQFG (3) CGMR (4) EHKP (5) BINS

49) தேசிய காங்கிரஸின் தலைமைத்துவ இயக்கத்திற்குப் பொருத்தமான சேர்மானம்

(1) AJLT (2) OQMR (3) CGMR (4) ACDE (5) BDCE

50) இடதுசாரி இயக்கத்திற்குப் பொருத்தமான சேர்மானம்

(1) BINS (2) NSPT (3) IBFG (4) BSDE (5) BDIN